செ.வெ.எண்.486 நாள்.2.8.2007

# செய்தி வெளியீடு

மணல் எடுப்பதிலும், அதனை விற்பனை செய்வதிலும் பலவிதமான தவறுகள் நடைபெறுவதாக நாளிதழ்களில் தொடர்ந்து செய்தி வந்து கொண்டிருப்பதைத் தொடர்ந்து இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கான துறைகள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் தலைமைச் செயலகத்தில் நீண்ட நேரம் விவாதம் நடத்தினார். இந்தக் கூட்டத்தில் தலைமைச் செயலாளர் அவர்கள், பொதுப்பணித்துறை செயலாளர், தொழில் துறை செயலாளர் அவர்கள், நிதித்துறை அதிகாரிகளும், கனிமத் துறை அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள்.

தவறுகளை உடனடியாக களைவதற்கு எந்தெந்த வகைகளிலே நடவடிக்கை எடுக்கலாம் என்பது குறித்து அதிகாரிகளிடம் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டதோடு, அரசாங்கமே நேரடியாக அந்தப் பணிகளை பொதுப்பணித் துறை மூலமாக செய்யலாமா என்பது குறித்தும் கருத்துக்களைக் கேட்டார். பொதுப்பணித் துறையே நேரடியாக இந்தப் பணி யிலே ஈடுபட்டால், மாநிலம் முழுவதும் நடைபெற வேண்டிய மற்ற வளர்ச்சிப் பணிகளில் சுணக்கம் ஏற்பட்டு விடும் என்ற கருத்து கூறப்பட்டதின் அடிப் படையில் இப்போதைக்கு தற்போதைய முறையே தொடரலாம் என்ற நிலையில், அதிலே எந்த விதமான முறைகேடுகளும் வராத அளவிற்கு அதிகாரிகள் கண்டிப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும், அதிலே தவறுகள் ஏற்பட்டால் அதிலே சம்மந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் இன்றைய கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

**அரசுக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகையை முறையாகக் கட்டாமல் லாரிகளில் திருட்டுத்தனமாக மணலை எடுத்துச் செல்ல யார் முற்பட்டாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். அரசுக்கு வர வேண்டிய வருவாயை ஏமாற்றி பிழைக்க நினைக்கும் யாரையும் வளர்க்க உதவிடாமல், அதிகாரிகள், குறிப்பாக வருவாய்த் துறையினர், பொதுப்பணித் துறையினர் மற்றும் காவல் துறையினர் முறையாகக் கண்காணித்து மணல் விற்பனை நல்ல முறையில் நடப்பதற்கும் பொது மக்களுக்குத் தேவையான மணல் குறைந்த விலையில் கிடைப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கேற்ப, தீவிர நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு சார்பில் தெரிவிக்கப்படுகிறது.**

***

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9